பக்கங்கள்: 10

விலை : 20/-

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | பங்குனி 23 திங்கட்கிழமை 06.04.2020 | கதிர் 20

# தனிமைப்படுத்தலுக்கான காலம் மேலும் இரு வாரங்களால் நீடிப்பு

கொழும்பு, ஏப். 06

இலங்கையில் கொரோனா வைரஸ் அச்சுறுத்தலுக்கு எதிரான தனிமைப்படுத்தலுக்கான காலம் 14 நாள்களில் இருந்து 28 நாள்களாக - மேலும் 14 நாள்கள் கொண்டதாக - அதிகரிக்கப்பட்டிருக்கின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்கொரியாவில் இருந்து வந்த 34 வயதுடைய நபர் ஒருவருக்கு இரண்டு வார கால தனிமைப்படுத்தல் முடிந்து மேலும் ஒரு வாரம் சென்ற பின்னர் - கடந்த 5 ஆம் திகதி - கொரோனாத் தொற்று இருக்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டமையை அடுத்தே இந்த முடிவு அதிகாரபூர்வமாக எடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேலதிக இரண்டு வாரகாலம் கட்டாயமானது என்று இன்னும் உத்தியோகபூர்வமாக அதிவிக்கப்படாத போதிலும், சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டவர்களை அது முடிந்த பின்னரும் மேலும் இரண்டு வார காலம் அதைத் தொடருமாறு கோரப்பட்டுள்ளது என்று இராணுவத் தளபதியும் கொரோனா பரவல் தடுப்பு அணியின் தலைவருமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இந்த மேலதிக இரு வார காலத் தனிமைப்படுத்தல் தொடர்பில் உள்ளூர் சுகாதார அதிகாரிகளுக்கு அறிவுறுத் தப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

# பருத்தித்துறை வாசி கொரோனாவினால் இன்று உயிரிழந்தாரா?

## அண்மையின் கம்போடியா சென்று வந்த அவரின் இரத்த மாதிரி பரிசோதனைக்கு

யாழ்ப்பாணம், ஏப். 07

கொரோனாவைரஸ்தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் இன்று அதிகாலை 2 மணிக்கு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட ஒருவர் அங்கு உயிரிழந்துள்ளார்.

2

## இலங்கையில் 42,000 பேர் பேராபத்தில்!

### மருத்துவர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு,ஏப்.06

இலங்கையில் சுமார் 42 ஆயிரம் பேர் ஆபத்தான நிலையில் உள்ளனர் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

2

## மடுவில் நாளை விசேட வழிபாடு

மன்னார், ஏப். 06

உலகத்தையே அச்சத்துக்கு உள்ளாக்கி வரும் கொரோனா நோயில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் வகையில், மன்னார் மடு திருத்தலத்தில் நாளை முற்பகல் 11 மணிக்கு விசேட வழிபாடு இடம்பெறவுள்ளது.

2

## இலங்கையர் ஒருவர் கனடாவில் கொலை!

றொறன்ரோ, ஏப். 06

றொறன்ரோ - ஸ்கார்பாரோ பகுதியில் இரு இலங்கையர்களுக்கு இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி இடம்பெற்ற மோதலில் ஒருவர் உயிரிழந்தார்.

2

## 14,966 பேர் கைது

கொழும்பு, ஏப். 06

நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டுள்ள பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தை மீறிச் செயற்பட்ட குற்றச்சாட்டில் 14 ஆயிரத்து 966 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளமையோடு, 3,751 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

2

## சுவிஸ் போதகரால்தான் யாழ். நிலைமை மோசம்

### பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் விளக்கம்



யாழ்ப்பாணம், ஏப். 06

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வெளிநாடுகளிலிருந்து வருகை தந்தவர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புடையவர்கள்

2

## அரசியல் கைதிகளை உடனே விடுவியுங்கள்

### அடைக்கலநாதன் கோரிக்கை



மன்னார், ஏப். 06

அரசியல் கைதிகளை விடுதலை செய்ய ஜனாதிபதி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என, முன்னாள் நாடாளுமன்ற

2

## 19 மாவட்டங்களில் வியாழன் 10 மணிநேர ஊரடங்கு தளர்வு

கொழும்பு, ஏப். 06

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம், கண்டி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தற்போது நடைமுறையில் இருக்கும் ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல்வரை தொடர்ந்தும்

2

## 37 பேர் கைதாகினர்



யாழ்ப்பாணம், ஏப். 06

யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு வேளை காரணமின்றி நகருக்குள் வந்த 37 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

2

## இலங்கையில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்டவர்களை முழுந்த வரை வேகமாகக் கண்டறிந்து தனிமைப்படுத்த ஏதுவாக இலங்கையில் நாள் ஒன்றுக்கான கொரோனா பரிசோதனைகளை அதிகரிக்க வேண்டும் எனவும் மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசிடம் கோரியுள்ளது.

பயிர்ச்செய்கை மற்றும் உற்பத்தியைத் விரைவாகத் தொடங்கல் ஏதுவாக அதிவிரைவுச் சோதனைகள் மூலம் பாதிப்பற்ற நிலை உறுதி செய்யப்பட வேண்டும்.

இல்லையேல் மே அல்லது ஜூன் இறுதிக்குள் நாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்படும் எனவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் தற்போது நாளொன்றுக்கு வெறும் 300 பரிசோதனைகள் மட்டுமே இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் கொரோனாவைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ள தென்கொரியா போன்ற நாடுகள் நாளொன்றுக்கு அதிகளவான பரிசோதகைளைச் செய்தன. இதன் மூலம் வேகமாக நோயாளர்கள் கண்டறியப்பட்டு ஆரோக்கியமானவர்களிடம் இருந்து தனிமைப்படுத்தப்பட்டனர் என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

## மடுவில் நாளை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையால் தமிழ், சிங்கள மொழிகளில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

## இலங்கையர் ஒருவர் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொல்லப்பட்டவர் இலங்கைத் தமிழர் எனத் தெரியவருகிறது.

கொலையாளி எனச் சந்தேகிக்கப்படும் மற்றொரு இலங்கையர் சம்பவ இடத்தில் இருந்து தப்பியோடியுள்ளார்.

ஸ்கார்பாரோ - பிஞ்ச் அவென்யூ பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இருவருக்கு இடையில் ஏற்பட்ட மோதல் குறித்து மாலை 3.30 மணியளவில் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டதையடுத்து அங்கு விரைந்த பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்தில் இருவர் வாக்குவாதத்தில் ஈடுபட்டு பின்னர் அது மோதலாக மாறியதாக விசாரணைகளை மேற்கொண்ட இன்ஸ்பெக்டர் போல் ரிங்காஃப் தெரிவித்தார்.

என்ன காரணத்துக்காக அவர்கள் முரண்பட்டுக் கொண்டனர் என்பது குறித்து விசாரிக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸ் அதிகாரி கூறினார்.

மோதலில் ஈடுபட்ட இரண்டு ஆண்களில் ஒருவர் சம்பவ இடத்தில் இறந்துவிட்டார். அவரைத் தாக்கிக் கொன்றவர் என நம்பப்படும் சந்தேக நபர் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார். பாதிக்கப்பட்டவருக்கும் சந்தேக நபருக்கும் இடையில் என்ன உறவு என்பது குறித்து எந்தத் தகவலும் கிடைக்கவில்லை எனப் பொலிஸ் அதிகாரி ரிங்காஃப் கூறினார்.

## 14,966 பேர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊரடங்கு அமுல்படுத்தப்பட்ட கடந்த மார்ச் 20ஆம் திகதி மாலை 6 மணி முதல் இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணி வரையான காலப் பகுதியினுள்ளேயே இந்தக் கைதுகள் இடம்பெற்றுள்ளன.

அந்த வகையில் இன்று காலை 6 மணி முதல் நண்பகல் 12 மணி வரையான 06 மணித்தியால காலப்பகுதியினுள் பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தை மீறிச் செயற்பட்ட குற்றச்சாட்டில் 171 பேர் கைது செய்யப்பட்டுள்ளமையோடு, 86 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## பருத்தித்துறை வாசி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பருத்தித்துறையைச் சேர்ந்த 58 வயதுடைய அவர், கடந்த பெப்ரவரி 7ஆம் திகதி கம்போடியாவிலிருந்து நாடு திரும்பியுள்ளார்.

அவரது உயிரிழப்புக்குக் கொரோனா தொற்றுக் காரணமாக இருக்கலாமா என்று பரிசோதனை செய்வதற்கு இரத்த மாதிரிகள் பெறப்பட்டதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

ஆஸ்மா நோயாளியான அவருக்கு கடந்த மூன்று நாள்களாகக் காய்ச்சல், தடிமன் உள்ளிட்டவை காணப்பட்டமையால் இன்று அதிகாலை மந்திகை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். எனினும் அவர் உயிரிழந்துள்ளார்.

"அவரது உயிரிழப்புக்கான காரணத்தை கண்டறிவதற்கு மாதிரிகள் பெறப்பட்டு கோரோனா தொற்று பரிசோதனை முன்னெடுக்கப்படவுள்ளது - என்றும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

## 19 மாவட்டங்களில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைமுறையில் இருக்கும்.

ஏனைய 19 மாவட்டங்களிலும் வரும் ஏப்ரல் 9ஆம் திகதி வியாழக் கிழமை காலை 6.00 மணிக்கு தளர்த்தப்படும் ஊரடங்கு சட்டம் அன்றைய தினம் மாலை 4.00 மணிக்கு மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய பணிகளுக்காக மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்து முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகளை வினைத்திறனாக பேணும் வகையில் நடைமுறையில் உள்ள முறைமைகளை துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கு எதிராகச் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும்.

கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்கு உதவும் நடைமுறைகள் மக்களின் நலனுக்காகவே என்பதால் அந்த நடைமுறைகளையும் அறிவுறுத்தல்களையும் பொறுப்புடன் பின்பற்றுமாறு அரசு மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது - என்றுள்ளது.

## அரசியல் கைதிகளை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

ஏனைய கைதிகளை விடுதலை செய்வது போல் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளான அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய ஜனாதிபதி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் கோரியுள்ளார்.

நாட்டில் ஏற்பட்ட யுத்தத்தின் போது 'செல்' துகள்களை உடலில் சுமந்தவாறு தற்போது பல அரசியல் கைதிகள் எவ்வித மருத்துவ வசதிகளும் இன்றிச் சிறைச்சாலைகளில் தவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் அவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு ஏனைய கைதிகள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டமை போன்று அவர்களையும் விடுதலை செய்ய அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் ஜனாதிபதிக்கு அவசர கோரிக்கை கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் -

நாட்டில் ஏற்பட்ட யுத்தத்தின் போது செல் துகள்களை உடலில் சுமந்தவாறு தற்போது பல அரசியல் கைதிகள் சிறையில் உள்ளனர்.

மேலும் தீர்ப்பு வழங்கப்பட்ட அரசியல் கைதிகளும் உள்ளனர்.

இவர்கள் தற்போது மருத்துவ வசதிகள் இல்லாமல் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

நாட்டில் கொரோனா அச்சம் காரணமாக சிறைச்சாலையில் உள்ள கைதிகள் பிணையில் விடுதலை செய்யப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் குறித்த அரசியல் கைதிகளையும் முன்னுரிமை அடிப்படையில் அரசு விடுதலை செய்ய துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 37 பேர் கைதாகினர் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். நகரில் இன்று திங்கட்கிழமை மருந்தகங்கள், வங்கிக் கிளைகள் திறந்திருந்த நிலையில் மக்களின் வருகை அதிகமாகக் காணப்பட்டது.

இதனால் முற்பகல் 10 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக வந்திறங்கிய யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் வீதித் தடையை ஏற்படுத்தி வாகனங்களில் செல்வோரிடம் விசாரணை நடத்தினர்.

இதன்போது, மருந்தகங்களுக்குச் செல்வதற்கான மருத்துவரின் சிட்டை காண்பித்தவர்களும் அத்தியாவசிய சேவைகளுக்கான அடையாள அட்டை வைத்திருந்தவர்களும் மட்டும் அனுமதிக்கப்பட்டனர். காரணமின்றிப் பயணித்தவர்களைப் பொலிஸார் கைது செய்தனர்.

அவர்கள் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்றும் அவர்களது வாகனங்கள் அசாதாரண நிலை முடியும் வரை தடுத்துவைக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## சுவிஸ் போதகரால்தான் .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என சுமார் ஆயிரத்து 300 பேரைச் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தி வைத்திருந்தோம். எனினும் அந்த நேரத்தில் சுவிஸிலிருந்து வருகை தந்த போதகரால் பிரச்சினை ஆரம்பித்தது என்று யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஏகாம்பரநாதன் தேவநேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் கொரோனா வைரஸ் தொற்று இனித் தீவிரமடைந்தால் தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்தும் விடயம் பெரும் சிக்கலாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் இன்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவற்றை கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள 14 சுகாதார மருத்துவ அலுவலகர் பிரிவுகள் உள்ளன. எனவே யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கோரோனா தொற்று கட்டுப்பாட்டுப் பணிகள், நபர்களைத் தனிமைப்படுத்தல் மற்றும் நபர்களைக் கண்டறிதல் என அத்தனை செயற்பாடுகளையும் சுகாதார மருத்துவ அதிகாரிகள், மூத்த பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

எனவே பிரதேச மட்டத்தில் உள்ள 14 சுகாதார மருத்துவ அலுவலர் பிரிவுகளில் உள்ள அலுவலர்களும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் உள்ள சில அதிகாரிகளும் பிராந்திய மருந்து வழங்கல் அலுவலகத்தின் பணியாளர்களும் இன்று மட்டும் தொடர்ச்சியாகப் பணியாற்றுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் ஆரம்பத்தில் இருந்ததைவிட மக்கள் கோரோனா வைரஸ் பற்றி விழிப்புணர்வடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வெளிநாடுகளிலிருந்து வருகை தந்தவர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புடையவர்கள் என சுமார் ஆயிரத்து 300 பேரைச் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தி வைத்திருந்தோம். எனினும் அந்த நேரத்தில் சுவிஸிலிருந்து வருகை தந்த மதபோதகரால் பிரச்சினை ஆரம்பித்தது.

அதனையடுத்து தாவடியைச் சேர்ந்த கட்டட ஒப்பந்தக்காரர் மார்ச் 21ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு கொரோனா தொற்று உள்ளமையை உறுதிப்படுத்தி மார்ச் 22ஆம் திகதி எமக்கு அறிக்கை கிடைத்தது.

எனினும் அவருக்கு கொரோனா தொற்று உள்ளது என்ற அறிக்கை 22ஆம் திகதி கிடைப்பதற்கு முன்னதாகவே அவருடன் நேரடியாகவும் சந்தர்ப்ப சூழல் அடிப்படையிலும் தொடர்பு ஏற்பட்ட சுமார் 200 பேரை நாம் அடையாளப்படுத்திவிட்டோம். அதனால் அவர்களைப் பாதுகாப்பாக நாம் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்திவிட்டோம்.

இந்த விடயத்தில் சுகாதார மருத்துவ அதிகாரிகளினதும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களினதும் பெரும் பங்களிப்பு உண்டு. அவர்கள் இதனை நேரடியாகச் சென்று செய்திருந்தனர். சுயதனிமைப்படுத்தலை எம்மால் ஒழுங்கமைக்கப்பட்டாலும் பொலிஸாரும் இராணுவத்தினரும் பக்கபலமாக இருந்தனர். தற்போதும் இராணுவத்தினர் அந்தப் பணியை முன்னெடுக்கின்றனர்.

இவ்வாறு எம்மால் விரைந்து செயற்பட முடிந்தமையால்தான் யாழ்ப்பாணத்தில் கொரோனா தொற்றை ஓரளவு கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவர முடிந்தது.

மேலும் போதகருடன் நெருங்கமாகப் பழகிய 20 பேரை பலாலியில் உள்ள தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைத்தோம். அவர்களது கண்காணிப்புக் காலம் 2 வாரங்களில் நிறைவடைய வீடுகளுக்குச் செல்ல அனுமதியளிக்கவேண்டிய தேவை ஏற்பட்டது. எனினும் அவர்களைப் பரிசோதனைக்குட்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது.

அவர்களின் பரிசோதனையின்படி 20 பேரில் 6 பேருக்கு கோரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

தாவடியில் 163 குடும்பங்கள், மானிப்பாயில் 70 குடும்பங்கள், ஆனைக்கோட்டையில் 40 குடும்பங்கள், நாவந்துறையில் 3 குடும்பங்கள், அரியாலையில் 20 குடும்பங்கள், பூம்புகாரில் 25 குடும்பங்கள், தெல்லிப்பளையில் ஒரு குடும்பம், கோப்பாயில் 18 குடும்பங்கள் மற்றும் பருத்தித்துறையில் 18 குடும்பங்களை வீடுகளில் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தியுள்ளோம்.

இவற்றில் தாவடி, அரியாலை, நாவந்துறை மற்றும் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த 50 பேரின் மாதிரிகள் எடுக்கப்பட்டு பரிசோதனைக்குட்படுத்தப் பட்டன. அவற்றில் எமக்குக் கிடைத்த 42 பேரின் அறிக்கைகளும் தொற்று இல்லை எனக் கிடைத்துள்ளன.

யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைமையை வைத்துக் கொண்டு தொற்று இல்லை எனக்கூற முடியாது. ஏனென்றால் பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தவர்கள் அனைவரும் விடுவிப்பதற்கு தயாரான நிலையில் நல்ல உடல்நிலையோடு இருந்தவர்கள். எனினும் பரிசோதனையின் பின்னர் அவர்கள் ஆறு பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தலில் உள்ள ஒருவரை ஒரு தடவை பரிசோதனைக்குட்படுத்தும் போது தொற்று இல்லை என அறிக்கை கிடைத்துவிட்டால் எம்மால் முடிவுஎடுக்க முடியாது. அவரை இரண்டு அல்லது மூன்று முறை பரிசோதனைக்குட்படுத்தும் போதுதான சரியான முடிவும் நாம் வர முடியும்.

தற்போது 50 பேரின் மாதிரிகளே பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளன. 319 பேரின் மாதிரிகளும் பரிசோதனைக்குட்படுத்த வேண்டிய தேவை உள்ளது - என்றார்.

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000,
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பேரிடரிலும் இனவாதம்

**எந்தப் பேரிடர் வந்து இலங்கையைக் காவு கொண்டாலும் – சூறையாடினாலும் – அது, தான் மூழ்கிப் போய்க் கிடக்கும் இனவாதம், மதவாதம், மொழிவாதம் போன்ற கொரூர வாத நோய்களில் இருந்து வெளியேவராது என்பது திண்ணம்.**

**இப்போது கட்டவிழும் விடயங்களைப் பார்க்கும்போது, இந்தப் பேரிடர் விடயங்களை அதிகாரத் தரப்பும், பிறரும் கையாளுகின்ற – அணுகுகின்ற – போக்கைப் பார்க்கின்ற போது, இது தெளிவாகின்றது.**

**ஏதோ ஒரு மதத்தவரால் அல்லது இனத்தவரால்தான் இந்தக் கொரோனா வைரஸ் இலங்கைக்குள் வந்தது என்பது போலவும் –**

**இல்லாவிட்டால், இது அமைதியான, சமாதானமான சொர்க்க பூமியாக விளங்கியிருக்கும் என்பது போலவும் – பல தரப்பினராலும் கதைகள் பரப்பப்பட்டு வருகின்றமையைக் கண்டு அதிர்ச்சியில் உறைவதைத் தவிர நமக்கு வேறு மார்க்கமில்லை.**

**குறிப்பாக சிறுபான்மை இனத்தவரை இலக்கு வைத்துத் தான் இந்தப் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.**

**விசேடமாக, இந்தப் பேரிடர் இலங்கையைத் தாக்க முன்னர் இங்கு நீடித்து வந்த மதப் பூசல், சமயப் பிணக்கு, மத நம்பிக்கை முரண்பாடுகள் எல்லாம் இப்போது இந்தப் பேரிடர் வாய்ப்பை வசதியாகப் பயன்படுத்திக் கொண்டு கொடி கட்டிப் பறக்கின்றன.**

**கொரோனா வைரஸைக் கொண்டு வந்தவர்கள் யாரும் விரும்பி அதைத் தேடிப் போய், அலைந்து பெற்றுக் கொண்டு இங்கு வந்தவர்கள் அல்லர். அதை விரும்பி ஊர், ஊராகப் போய் விற்றவர்களோ, பரப்பியவர்களோ அல்லர்.**

**மதம் பரப்புவதற்காகப் பிரசாரம் செய்ய வந்தவரோடு, வைரஸும் ஒட்டிக் கொண்டு வந்துவிட்டது என்பது உண்மையாக இருக்கலாம். அதற்காக அவரை வைரஸ் பரப்ப வந்த மனித குல எதிரி போன்று சித்திரிப்பது, அதனை மத வெறுப்புச் செயற்பாட்டுக்குச் சாதகமான ஒன்றாக முன்னெடுப்பது எல்லாம் வெறும் அபத்தமான – அர்த்தமற்ற – அறிவுபூர்வமில்லாத – செயல்கள்.**

**அந்தக் காலகட்டத்தில் வெளிநாட்டுப் பயணம் செய்தவர்கள் நாங்களாகவோ அல்லது நீங்களாகவோ இருந்திருப்பின் நாங்களுமே – அதை விரும்பாமலேயே – எங்களது நடத்தைக்கு அப்பாற்பட்ட காரணங்களினால் அதைச் செய்திருப்போம். எம்மையறியாமலேயே அது நிகழ்ந்திருக்கும்.**

**தவறு எங்கு என்றால், அரசும், அதிகாரிகளும், பிற பொறுப்புள்ள வழிகாட்டிகளும் அதற்குப் பின்னர் கூறிய கருத்துக்களை – பரிந்துரைகளை – விதி முறைகளை – பின்பற்றுவதில் யாரும் தவறிழைத்திருக்கலாம்; தவறிழைத்திருக்கின்றார்கள்.**

**அதைக் கூட மத, இன வெறுப்புக் கண்ணோட்டத்துடன் விமர்சனம் செய்வது தவறாகும்.**

**இந்தப் பேரிடரின் தொடர்ச்சியாக நாட்டில் அரசியல் குழப்பம், அரசமைப்பு நெருக்கடி, பொருளாதாரப் பின்னடைவு என்று பல எதிர்விளைவுகள் – பாதிப்புகள் – தொடர் சங்கிலிப் பெறுபேறுகளாக எதிர்கொள்ளப்பட வேண்டியவையாக இருக்கின்றன.**

**அரசமைப்பு, அரசியல் நெருக்கடிக்குச் சட்ட ரீதியான தீர்வுக்கு தமிழர் தரப்பில் முன்வைக்கப்பட்ட பரிந்துரை – சிபாரிசு – அதன் வலிமை, நீதி, நியாயம் ஆகியவற்றின் அடிப்படையில் அணுகப்படாமல், அதுவும் கூட இனவாதமாகவே தெற்கில் பிரசாரம் செய்யப்படுகின்றது.**

**இந்த நெருக்கடிகளுக்கு நியாயமான வழயில் – சட்ட முறையான விதத்தில் – தீர்வு காண வேண்டுமானால், கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுவதே ஒரே வழி என தமிழர் தரப்பில் சுமந்திரன், சுரேஷ் பிறேமச்சந்திரன் போன்றோர் வெளிப்படையாக வலியுறுத்தியுள்ளனர்.**

**நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுவது அரசியல் ரீதியாக தனக்கு உசிதமான தல்ல எனக் கருதும் ஆளும் தரப்பு, அதனால்நாடாளுமன்றத்தைக்கூட்டுதல்என்றகோரிக்கையை தமிழர் தரப்பின் வேண்டுகோள் போலக் காட்டி அந்த அழைப்புக்கு எதிராகப் பேரினவாதக் காட்டுக் கூச்சலைக் கிளப்பி வருகின்றது.**

**தென்னிலங்கையில் எந்த ஊடகத்தைத் திறந்தாலும் இதுதான் நிலைமை.**

**பேரிடர் இழப்புக்களையும், அதனால் ஏற்படும் நெருக்கடிகளையும், முழு இலங்கையரும் ஒன்றுபட்டு எதிர்கொள்ளத் தயார் இல்லை எனின், அதனையும் கூட இனவாதக் கண் கொண்டே அணுகுவோம் எனின், இலங்கை நாட்டுக்கு மீட்சியே கிடையாது என்பதே அர்த்தம்.**

# தேர்தலை நடத்தும் தேவையே இல்லை

## கூறுகிறார் டிலான் பெரேரா



கொழும்பு, ஏப். 06

நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கோ அல்லது பழைய நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கோ எந்தத் தேவையும் இல்லை என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றிலிருந்து நாட்டையும், மக்களையும் மீட்டெடுத்த பின்னர் தேர்தலை நடாத்தி மீண்டும் நாடாளுமன்றத்தைக் கூட்டுவது தொடர்பாகத் தீர்மானிக்கலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக உயர் நீதிமன்றின் ஆலோசனையை பெறுவதே உசிதமானது எனத் தெரிவித்த அவர், பழைய நாடாளு மன்றத்தை மீண்டும் கூட்டவோ தேர்தலை நடத்திப் புதிய நாடாளுமன்றத்தை கூட்டுவதற்கான தேவையோ தற்போதில்லை எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தனியார் மருந்தகங்களில் மருந்துத் தட்டுப்பாடில்லை

கொழும்பு, ஏப். 06

இலங்கையின் தனியார் சுகாதாரத் துறை, தனியார் வைத்தியசாலைகள் மற்றும் தனியார் மருந்தகங்களில் அத்தியாவசிய மருந்துகளுக்கு எந்தவித தட்டுப்பாடும் இல்லை என இலங்கை ஔடத இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்தச் சங்கத்தின் தலைவர் கஸ்தூரி செல்லராஜா வில்சன், இது தொடர்பான அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில், சந்தையில் மருந்துகளுக்கான பற்றாக்குறை நிலவுவதாக ஊடகங்களில் வெளியாகும் செய்திகளில் எந்தவித உண்மையும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சகல மருந்து இறக்குமதியாளர்களும் குறைந்தது இரண்டு மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு அத்தியாவசிய மருந்துகளை கையிருப்பில் வைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை சிறிய சந்தை வாய்ப்பை கொண்ட நாடு என தெரிவித்துள்ள இலங்கை ஔடத இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர், உலகெங்கிலும் உள்ள மருந்து நிறுவனங்களுடன் தமது சங்கம் சிறந்த உறவைக் கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவை அனைத்தும் தேசிய மருந்தாக்கற் கூட்டுதாபனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அவர், அதனால் மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்படாமல் பார்த்துக் கொள்வார்கள் எனவும் அவர் கூறியுள்ளார்.

தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்ட காலத்தில் வெளி மாவட்டங்களுக்கு மருந்துகளை விநியோகம் செய்வது தொடர்பான பிரச்சினை பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பொலிஸாரின் உதவியுடன் தீர்க்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மருந்துகளை களஞ்சியப்படுத்தும் போது அவை தொடர்பில் விழிப்புடன் இருப்பது முக்கியம் என்றும், மருந்துகளை சரியாக சேமிக்கத் தவறுவது அதன் வீரியத்தை பாதிக்கும் என்றும் அவர் கூறினார்.

# பொருள் கொள்வனவில் ஆர்வம் காட்டிய மக்கள்

*மன்னார், ஏப். 06*

*மன்னார் மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் இன்று திங்கட்கிழமை காலை 6 மணியளவில் தளர்த்திக் கொள்ளப்பட்ட நிலையில் மாவட்டத்தில் உள்ள மக்கள் வழமைக்கு மாறாக இன்று பொருள்களைக் கொள்வனவு செய்வதில் முண்டியடித்தனர்.*

*பல்பொருள் விற்பனை நிலையங்களில் மக்கள் வரிசையாக நின்று பொருள்களைக் கொள்வனவு செய்துள்ளனர்.*

*மன்னார் சந்தைப் பகுதியில் மக்கள் முண்யடித்துக் கொண்டு பொருள்களைக் கொள்வனவு செய்தனர்.*

*குறிப்பாக மன்னார் புதிய பஸ் தரிப்பிடப் பகுதியில் தற்காலிகமாக மரக்கறி விற்பனை இடம் பெற்று வந்தது.*

*மக்கள் இலட்சியப் போக்குடன் சமூதாய இடைவெளி இன்றி முகக்கவசம் அணியாமல் பொருள்களைக் கொள்வனவு செய்தனர்.*

*அவ்வாறு செயற்பட்டவர்களைப் பொலிஸார் எச்சரித்ததோடு, முகக்கவசத்தை அணியுமாறு வலியுறுத்தினர்.*

*மேலும் மன்னார் நகர் முழுவதும் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.*

*மன்னார் பிரதான பாலத்தடியில் அமைந்துள்ள இராணுவத்தின் சோதனைச்சாவடியில் மன்னாரில் இருந்து வெளியில் செல்லும் மற்றும் மன்னாருக்குள் வரும் மக்களின் அடையாள அட்டையை இராணுவம் சோதனை செய்தது.*

*வெளி மாவட்டத்தில் உள்ளவர்கள் மன்னாருக்குள் வருவதை கட்டுப்படுத்த இந்த நடவடிக்கைகளை இராணுவம் மேற்கொண்டு வருகின்றது.*

*இதேவேளை மன்னார் மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டத்தை மீறிய 105 பேர் இது வரை கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.*

*மார்ச் மாதம் 20 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் அந்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.*

# இந்திய மக்களின் பொறுப்புணர்வு மெய் சிலிர்க்க வைக்கிறது - மோடி

கொரோனாவுக்கு எதிரான போராட்டத்தில் இந்திய மக்கள் காட்டி வரும் பொறுமை மற்றும் பொறுப்புணர்வு இது வரை இல்லாத ஒன்று, மெய்சிலிர்க்க வைத்திருக்கிறது.

இவ்வாறு தெரிவித்தார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி. அவரது பாரதீய ஜனதாக் கட்சியின் 40ஆவது ஆண்டு நிறைவையொட்டி தொண்டர்களுக்கு வீடியோ மூலம் இன்று உரையாற்றினார்.

கொரோனாவுக்குஎதிரானபோராட்டம் போரை விட குறைவானது அல்ல என்று தெரிவித்த மோடி எனவே பாஜக தொண்டர்கள் ஒவ்வொருவரும் பிரதமர் நிவாரண நிதிக்கு போதிய நிதி அளிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

பாஜக 1980ஆம் ஆண்டு இதே நாளில் தொடங்கப்பட்ட நிலையில் அக்கட்சியின் 40ஆம் ஆண்டு நிறுவன நாள் தினத்தை பாஜகவினர் கொண்டாடி வருகின்றனர்.

கொரோனாவைரஸ்பெரியஅளவில் பாதிப்பை ஏற்படுத்தினாலும் அதனை உலகமே எதிர்த்து போராடி வருகிறது.

அத்தியாவசிய தேவைகளை தவிர மற்றவற்றை தவிர்த்து மக்கள் காட்டி வரும் அணுகுமுறை அளப்பரியது. ஊரடங்கு காலத்திலும் தீபங்களை ஏற்றி அவர்கள் காட்டிய உணர்வு நமது ஒற்றுமைக்குச் சாட்சியாகும்.



கடந்த காலத்தில் போர்கள் நடந்த போது நமது தாயும் சகோதரிகளும் தங்களிடம் இருந்த தங்க நகைகளை தந்ததாக வரலாறு உண்டு. தற்போது கரோனாவுக்கு எதிரான போராட்டமும் போரை விட குறைவானது அல்ல. இது மனித குலத்தைக் காப்பதற்கான போர்.

எனவே பாஜக தொண்டர்கள் ஒவ்வொருவரும் பிரதமர் நிவாரண நிதிக்கு போதிய நிதி அளிக்க வேண்டும். தாங்கள் மட்டுமின்றி ஒவ்வொருவரும் தங்கள், நண்பர்கள், உணவினர்கள் என தலா 40 பேரை பிரதமர் நிவாரண நிதிக்கு நிதியளிக்க உந்துதலாக இருக்க வேண்டும்.

இவ்வாறு பிரதமர் மோடி கூறினார்.

# இந்தியாவில் இந்த வாரம் உச்சம் பெறும் கொரோனா

## 4 ஆயிரம் பேருக்கு ஏற்கனவே தொற்று



இந்தியாவில் கொரோனா வைரஸ் இந்த வாரம் உச்ச கட்டத்துக்கு வரும் என கணிக்கப்பட்டுள்ளதால் அதனை எதிர்கொள்ளும் வகையில் அரசு தயார்ப்படுத்தல்களைச் செய்யவேண்டும் என்று மத்திய அரசுக்குப் பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் இதுவரை 4 ஆயிரம் பேரை கொரோனா தாக்கி உள்ளது. கடந்த சில நாள்களாக தினமும் 500க்கும் மேற் பட்டவர்கள் கொரோனா தாக்குதலுக்கு ஆளாகி வருகிறார்கள். தற்போதைய நிலவரப்படி 4 நாள்களில் கொரோனா தாக்குதல் 2 மடங்கு அதிகரித்துள்ளது. இதன் நிலைமை குறித்து சுகாதாரத்துறை உள்ளிட்ட உயர்மட்ட அமைப்புகள் ஆய்வு நடத்தி உள்ளன.

அதில் நோய் தொற்று இந்த வாரத்தில்தான் உச்சத்தை தொடும் என்று கூறியுள்ளனர். அதன் பிறகு படிப்படியாக குறையலாம் என்றும் அந்த குழு கூறியுள்ளது. மே 9ஆம் திகதியளவில் நோய் பரவல் முடிவு கட்டத்துக்கு வரும் என அவர்கள் கணித்துள்ளனர். அதன் அடிப்படையில் இந்திய மத்திய அரசு தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று அந்த குழு கொரோனா கட்டுப்பாட்டு அதிகாரிகள் குழுவுக்குத் தகவல் அனுப்பியுள்ளது.

டெல்லி மாநாட்டில் பங்கேற்றவர்களால் நோய் பரவுதல் அதிகமாகி உள்ளது. அதையும் கணக்கில் எடுத்துக் கொண்டு நோய் தாக்குதல் எப்படி இருக்கும் என்றுமுழுமையாகஆய்வுகளைமேற்கொண்டுள்ளனர்.

மேலும் சீனா உள்ளிட்ட பிற நாடுகளில் இருந்து கருத்து பரிமாற்றங்களையும் பெற்றுள்ளனர். அந்த வகையில் இந்த வாரம் உச்சத்தை தொடும் கொரோனா வைரஸ் அதன் பிறகு தாக்கத்தை குறைத்து கொள்ளும் என்று சொல்லி இருக்கிறார்கள். அதேநேரத்தில் ஊரடங்கு மற்றும் கட்டுப்பாடுகள் சரியான பாதையில் செல்வதாகவும் அவர்கள் கூறியுள்ளனர். மேலும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள பல இடங்களில் இன்னும் கட்டுப்பாடுகள்விதிக்கவேண்டும்என்றுகூறப்பட்டுள்ளது.

# மகாராஷ்டிராவில் சிறிய நில நடுக்கம்

மகாராஷ்டிராவில் இன்று அதிகாலை லேசான நிலநடுக்கம் ஏற்பட்டதாகவும் உயிரிழப்பு எதுவுமில்லை என்றும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பால்கர் மாவட்டத்தில் துண்டல்வாடியில் இன்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இப்பகுதியைப் பொறுத்த வரை இது புதிதல்ல. சென்றவாரம்கூட துண்டல்வாடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது.

பால்கரின் தஹானு பகுதி நவம்பர் 2018 முதல் இத்தகைய அதிர்வலைகளை அடிக்கடி சந்தித்து வருகிறது. அவற்றில் பெரும்பாலானவை துண்டல்வாடி கிராமத்தை மையமாகக் கொண்டுள்ளவையாகும்.

திங்கள்கிழமை அதிகாலை ஏற்பட்ட லேசான நிலநடுக்கம் குறித்து தானே மாநகராட்சியின் பிராந்திய பேரிடர் மேலாண்மை பிரிவுத் தலைவர் சந்தோஷ் கதம் கூறுகையில் -

"துண்டல்வாடி கிராமத்தில் அதன் மையப்பகுதியுடன் 3.1 ரிக்டர் அளவிலான நடுக்கம் அதிகாலை 12.15 மணியளவில் உணரப்பட்டது. இந்நில நடுக்கத்தால் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை. சொத்து சேதமும் ஏற்படவில்லை" என்றார்.

# அம்பானியின் சொத்து மதிப்பு 23 சதவீதத்தால் கடும் வீழ்ச்சி!

## கொரோனாவின் கைவரிசை இதுவும்

கொரோனா வைரஸால் மக்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டு வரும் நிலையில் அதன் பக்க விளைவாகப் நாடுகளின் பொருளாதாரமும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அடுத்து வரும் சில மாதங்களில் வேலையற்றோர எண்ணிக்கை உச்சத்தை எட்டும் என்று ஐ.நா. எச்சரித்துள்ளது.

உலக கோடீஸ்வரர்களில் ஒருவராக இருக்கும் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் குழுமத்தின் தலைவர் முகேஷ் அம்பானியின் சொத்து மதிப்பு கொரோனாவின் தாக்கத்தால் கடந்த 2 மாதங்களில் 28 சதவீதம் குறைந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏறக்குறைய கடந்த 2 மாதங்களில் முகேஷ் அம்பானியின் சொத்து மதிப்பு 19 ஆயிரம் கோடி டொலர் குறைந்ததால், உலக கோடீஸ்வரர்கள் பட்டியலில் 9ஆவது இடத்திலிருந்து 17ஆவது இடத்துக்குச் சரிந்துள்ளார்.

மற்ற இந்திய கோடீஸ்வரர்களின் சொத்து மதிப்பும் கரோனா வைரஸின் பாதிப்பால் குறைந்துள்ளது. குறிப்பாக கவுதம் அதானியின் சொத்து மதிப்பு 37 சதவீதம் அல்லது 600 கோடி டொலர்கள் குறைந்துள்ளது. ஹெச்சிஎல் தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைவர் ஷிவ் நாடாரின் சொத்து மதிப்பு 26 சதவீதம் அல்லது 500 கோடி டொலர்கள் குறைந்தது. உதய் கோட்டக்கின் சொத்து மதிப்பு 28 சதவீதம் அல்லது 400 கோடி டொலர்கள் சரிந்துள்ளது.

சொத்து மதிப்புக் குறைவால் இந்த 3 கோடீஸ்வரர்களும் உலகின் முதல் 100 கோடீஸ்வரர்கள் பட்டியலில் இருந்தே நீக்கப்பட்டு விட்டனர். முகேஷ் அம்பானி மட்டும் முதல் 100 இடங்களில் நீடிக்கும் ஒரே இந்திய கோடீஸ்வரர் ஆவார்.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் பங்குச்சந்தையில் ஏற்பட்ட இழப்புகளில் உலக அளவில் 2ஆவது அதிகம் பாதிக்கப்பட்ட தொழிலதிபர் முகேஷ் அம்பானி ஆவார். முதலாவது இடத்தில் பிரான்ஸின் எல்விஎம்ஹெச் பேஷன் நிறுவனத்தின் தலைமை நிர்வாகி பெர்னார்ட் அர்னால்ட் ஏறக்குறைய 30ஆயிரம்கோடிடொலர்களை இழந்துள்ளார்.

# இந்திய உயிரியல் பூங்காக்களில் மிருகங்களை சோதிக்க உத்தரவு

## கொரோனா தொற்றை இருக்கிறதா என கண்டறிவதற்காக

இந்தியா முழுவதும் உயிரியல் பூங்காக்களில் உள்ள மிருகங்களை கண்காணிக்க மத்திய உயிரியல் பூங்காஆணையம்உத்தரவிட்டுள்ளது.

உலகம்முழுவதையும்கொரோனா வைரஸ் ஆட்டி படைத்து வருகிறது. வல்லரசு நாடான அமெரிக்காவில் தான் கொரோனா தற்போது அதிக பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

மனித சமூகத்தை மிரட்டி வரும் கொரோனா வைரஸ், விலங்குகளைப் பாதிக்காது என்று பரவலாக பேசப்பட்டு வந்தன. ஆனால், இந்தக்கூற்றைப் பொய்யாக்கும் வகையில், அமெரிக்காவின் நியூயோர்க் நகரத்தில் அமைந்துள்ள புரோன்ஸ் உயிரியல் பூங்காவில் பராமரிக்கப்பட்டு வரும் பெண் புலி ஒன்றுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனால் நாடு முழுவதும் உயிரியல் பூங்காக்களில் உள்ள மிருகங்களை கண்காணிக்க மத்திய உயிரியல் பூங்கா ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள உயிரியல் பூங்காவில் புலிக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டதையடுத்து இந்தியா முழுவதும் உள்ள உயிரியல் பூங்காக்களில் உள்ள மிருகங்களை கண்காணிக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டிருக்கிறது.

மேலும் முன்னெச்சரிக்கையாக மிருகங்களின் நடவடிக்கை மற்றும் மிருகங்களுக்கு ஏதேனும் கொரோனா அறிகுறி உள்ளதா? என சிசிடிவி கேமரா மூலம் கண்காணிக்கவேண்டும். சந்தேகத்திற்கிடமான விலங்குகளின் மாதிரிகளை 15 நாட்களுக்குள் சேகரித்து அனுப்ப வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அனைத்து மாநில அரசுகளுக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

# அமெரிக்க மீது திருட்டு பட்டம் திடீரென சுமத்துகிறது ஜேர்மனி

சீனாவில் இருந்து தாய்லாந்து வழியாக ஜேர்மனிக்கு வந்த சேர வேண்டிய 2 லட்சமுகக் கவசங்களை திருடிவிட்டதாக அமெரிக்கா மீது ஜேர்மனி குற்றஞ்சாட்டியுள்ளமை பெரும் பரபரப்பைக் கிளப்பியுள்ளது.

சீனாவில் வுகான் நகரில் உருவான கொரோனா வைரஸ், 200 நாடுகளுக்கும் மேல் பரவி உலகையே ஆட்டிப்படைத்து வருகிறது. இதில் அமெரிக்கா, இத்தாலி, ஸ்பெயின், பிரான்ஸ் ஆகிய நாடுகள் சீனாவைக் காட்டிலும் அதிகமான பாதிப்புகளை எதிர்கொண்டு வருகின்றன.

அதிலும் குறிப்பாக உலகளவில் அதிக எண்ணிக்கையில் கொரோனா நோயாளிகளை கொண்ட முதல் நாடாக அமெரிக்கா உள்ளது. அந்த நாட்டில் கொரோனா வைரஸ் பாதித்தவர்களின் எண்ணிக்கை 3 லட்சத்தை தாண்டி வேகமாக நகர்ந்து வருகிறது.

அதேபோல் இந்த கொடிய வைரசால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 9 ஆயிரத்தை தாண்டியுள்ளது. வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த ஜனாதிபதி டிரம்ப் தலைமையிலான நிர்வாகம் திணறி வருகிறது.

முக கவசம் அணிவதன் மூலம் கொரோனா வைரஸ் பரவுவதில் இருந்து தப்ப முடியும் என்று நம்பப்படுவதால் பெரும்பாலான நாடுகளில் முக கவசங்களுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. அந்த வகையில் அமெரிக்காவிலும் முக கவசங்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டு இருக்கிறது. இதனை சமாளிக்க டிரம்ப் நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்த நிலையில் அமெரிக்க நிறுவனங்கள் முக கவசங்கள் உள்ளிட்ட எந்தவொரு மருத்துவ உபகரணங்களையும் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடாது என ஜனாதிபதி டிரம்ப் நேற்று முன்தினம் உத்தரவு பிறப்பித்தார்.

அந்த உத்தரவில், அமெரிக்க நிறுவனங்கள் உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்ய அதிகமான மருத்துவ பொருள்களை வழங்க வேண்டும். உள்நாட்டு பயன்பாட்டிற்கு இந்தப் பொருட்கள் உடனடியாகத் தேவை என டிரம்ப் குறிப்பிட்டார்.




இந்த நிலையில் சீனாவில் இயங்கி வரும் '3 எம்' என்ற அமெரிக்க நிறுவனத்திடம் ஜேர்மனி முக கவசங்கள் 'ஆர்டர்' செய்திருந்தது. அதன்படி அந்த நிறுவனம் விமானம் மூலம் முக கவசங்களை ஜேர்மனிக்கு அனுப்பி வைத்தது.

ஆனால் முக கவசங்கள் தங்களுக்கு வந்து சேரவில்லை என்றும், அமெரிக்கா அதனை பறித்துக் கொண்டதாகவும் ஜேர்மனி அரசு பரபரப்பு குற்றம் சாட்டி உள்ளது. இது குறித்து ஜெர்மனி உள்துறை மந்திரி ஆண்ட்ரியாஸ் கீசல் கூறியதாவது:-

'3 எம்' நிறுவனத்திடம் 2 லட்சம் 'என் 95' முக கவசங்கள், 1 லட்சத்து 30 ஆயிரம் அறுவை சிகிச்சை முக கவசங்கள் மற்றும் 6 லட்சம் கையுறைகள் ஆகியவற்றை வழங்க உத்தரவு கொடுத்திருந்தோம்.

இவை அனைத்தும் விமானம் மூலம் சீனாவில் இருந்து தாய்லாந்து வழியாக ஜேர்மனிக்குக் கொண்டு வர முடிவு செய்யப்பட்டது. ஆனால் தாய்லாந்து தலைநகர் பாங்காக் விமான நிலையத்தில் அமெரிக்க அதிகாரிகள் இவை அனைத்தையும் பறித்துக்கொண்டனர்.

இது ஒரு நவீன திருட்டு ஆகும். சர்வதேச வர்த்தக விதிகளை ஜனாதிபதி டிரம்ப் தலைமையிலான அமெரிக்க நிர்வாகம் பின்பற்றவில்லை. இது கண்டனத்துக்குரியதாகும். - இவ்வாறு அவர் கூறினார்.

# பிரிட்டன் பிரதமர் வைத்தியசாலையில்

## கொரோனா தொற்று தீவிரமானதை அடுத்து

கொரோனா வைரஸ் நோய்தொற்றால் பாதிக்கப்பட்ட பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சன் நேற்று நள்ளிரவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

போரிஸ் ஜான்சனுக்கு கரோனா வைரஸ் தொற்று இருப்பது நாட்களுக்கு முன்பே உறுதி செய்யப்பட்டாலும், தன்னைத் தனிமைப்படுத்திக்கொண்டு அவர் சிகிச்சை எடுத்து வந்தார். ஆனால் நேற்று திடீரென மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

மிகவும் சோர்வாகவும், பரிதாபமான நிலையிலும் தனது வீட்டுஅறையிலிருந்து வெளியேறி அவர் மருத்துவமனைக்குச்சென்றார் என்று பிரிட்டன் ஊடகங்கள் தெரிவித்தன.

கொரோனா வைரஸ் தொற்றுக்கான அறிகுறிகள் தொடர்ந்து இருந்ததால் பிரதமர் ஜான் ஸன் மருத்துவமனையில் சேரக்கப்பட்டார். இது மருத்துவரின் ஆலோசனைப்படி எடுக் கப்பட்ட முடிவுதான். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே ஜான்ஸன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்" என்று பிரதமர் அலுவலகச் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

ஜான்ஸனுக்கு தொடர்ந்து காய்ச்சல் விட்டு, விட்டு வந்ததால் அவரால் சுயதனிமையிலிருந்து வெளியேற முடியவில்லை. இதனால் தொடர்ந்து வீட்டுக்குள்ளே இருப்பதாக தனது வீடியோ செய்தியில் அவர் கடைசியாகத் தெரிவித்திருந்தார்

ஜான்சன் நலமுடன் இருக்கிறார், அவர் விரைவில் திரும்பி வந்து அரச அலுவல்களைக் கவனிப்பார் என்று அவரது செய்தித் தொடர்பாளர் இன்று தெரிவித்தார்.

# இத்தாலியில் கொரோனா வருகின்றது கட்டுக்குள்!

உலகிலேயே கொரோனா வைரஸால் அதிகம் உயிரிழப்புக்களைச் சந்தித்த இத்தாலியில் தொற்று மற்றும் இறப்பு எண்ணிக்கை குறையத் தொடங்கியுள்ளது. நாட்டை முழு அளவில் முடக்கியதன் விளைவாக இது சாத்தியப்பட்டிருப்பதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

கடந்த மார்ச் 19ஆம் திகதிக்குப் பின் கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை நேற்று முதல்முறையாகக் குறைந்தது. 525 பேர் நேற்று உயிரிழந்தனர். இதற்கு முந்தைய நாள்களில் இந்த எண்ணிக்கை 750இற்கும் அதிகமாக இருந்தது.

கடந்த 2 வாரங்களுக்கு முன் மார்ச் 19ஆம் திகதி மிகக்குறைவாக 427 பேர் உயிரிழந்திருந்தார்கள். அதன்பின் நேற்றுத்தான் உயிரி ழப்பு மீண்டும் குறைந்துள்ளது.

கொரோனா வைரஸின் இரக்கமற்ற தாக்குதலில் மோசமாக பாதிக்கப்பட்ட நாடுகளில் பிரதானமானது இத்தாலி. இங்கு கொரோனா வைரஸ் 15 ஆயிரத்து 887 உயிர்களை காவுவாங்கியுள்ளது. ஒரு லட்சத்து 29 ஆயிரம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இதுவரை 21 ஆயிரத்து 815 பேர் கரோனா வைரஸிலிருந்து குணமடைந்துள்ளனார்கள்.

கடந்த சில நாட்களாக உயிரிழப்பு குறைவு, பாதிப்பு குறைவு, குணமடைந்தோர் எண்ணிக்கை அதிகரிப்பு போன்றவை அந்த நாட்டு மக்களுக்கு நம்பிக்கையையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளன.

கடந்த சனிக்கிழமை முதல் உயிரிழப்புகள் வீதம் 23 சதவீதம் குறைந்துள்ளது என்று இத்தாலியின் உத்தியோகபூர்வ தகவல்கள் கூறுகின்றன.

இதுகுறித்து இத்தாலியின் தேசிய சுகாதார நிறுவனத்தின் இயக்குநர் சில்வியோ புராசாபேரோ தெரிவித்ததாவது:-

இத்தாலியில் கடந்த சில நாள்களா உயிரிழப்புகள் வீதம் குறைந்து வருவது கொரோனா வைரஸின் தாக்கத்தை குறிக்கும் வளைவு கோடு சாயத்தொடங்குவதைக் குறிக்கிறது.

தொடர்ந்து இதுபோல் வரும் நாள்களில் இறப்புகள் குறைந்து வந்தால், ஊரடங்கை தளர்த்தும் அடுக்கட்ட நடவடிக்கையை பற்றி சிந்திக்கத் தொடங்குவோம் எனத் தெரிவித்தார்

இத்தாலியில் உள்ள 22 மண்டலங்களில் உள்ள மருத்துவமனைகளில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் வருவது நேற்று முதல்முறையாக் குறையத் தொடங்கியது. சனிக்கிழமை 29,010 நோயாளிகள் வந்த நிலையில், நேற்று 28,949 ஆகக் குறைந்தது. மிகவும் மோசமான நிலையில் சிகிச்சை பெற்று வருபவர்கள் எண்ணிகையும் 3,994லிருந்து 3,977 பேராகக் குறைந்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

# கொரோனா துளிகள்



* பாதிக்கப்பட்ட மொத்த நாடுகள், நிலங்கள்: **208**
* உயிரிழந்தோர்: **69 ஆயிரத்து 503**
* தொற்றுக்குள்ளானோர்: **12 லட்சத்து 75 ஆயிரம்**
* குணமானோர்: **2 லட்சத்து 65 ஆயிரம்**
* மோசமான நிலையிலுள்ளோர்: **46 ஆயிரம்**
* ஆகக் கூடுதல் இறப்பு: இத்தாலி நாட்டில் **15 ஆயிரத்து 887**
* ஆகக் கூடுதல் தொற்று: அமெரிக்கா நாட்டில் **3 லட்சத்து 37 ஆயிரம்**
* இறப்பில் இரண்டாம் இடம்: ஸ்பெயின் நாடு, **12 ஆயிரத்து 641**
* நேற்றைய புதிய தொற்றுக்கள்: **71 ஆயிரத்து 409**
* 3 லட்சத்துக்கு மேல் தொற்று : ஒரே நாடு, அமெரிக்கா
* ஒரு லட்சத்துக்கு மேல் தொற்று: 3 நாடுகள், இத்தாலி, ஸ்பெயின், ஜேர்மனி
* 50 ஆயிரத்துக்கு மேல் தொற்று: 3 நாடுகள், பிரான்ஸ், சீனா, ஈரான்
* 20 ஆயிரத்துக்கு மேல் தொற்று: 3 நாடுகள், பிரிட்டன், துருக்கி, சுவிற்சர்லண்ட்,
* 10 ஆயிரத்துக்கு மேல் தொற்று: 7 நாடுகள், பெல்ஜியம், நெதர்லண்ட், கனடா, * ஒஸ்ரியா, பிரேசில், போர்த்துக்கல், தென்கொரியா
* 5 ஆயிரத்துக்கு மேல் தொற்று: 5 நாடுகள், இஸ்ரேல், சுவீடன், ரஷ்யா, ஆஸ்திரேலியா, நோர்வே.
* 3 ஆயிரத்துக்கு மேல் தொற்று:12 நாடுகள், அயர்லண்ட், செஸ்சியா, சிலி, டென்மார்க், இந்தியா, பொலண்ட், ரொமானியா, மலேசியா, ஜப்பான், ஈக்குவடோர், பிலிப்பைன்ஸ், பாகிஸ்தான்
* 2 ஆயிரத்துக்கு மேல்: 5 நாடுகள், லக்ஸம்பேர்க், சவுதி அரேபியா, பெரு, இந்தோனேசியா, தாய்லாந்து, பின்லாந்து, மெக்சிக்கோ
* அமெரிக்காவில் இரண்டாவது நாளாக ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். நேற்று மட்டும் அங்கு ஆயிரத்து 200 பேர் உயிரிழந்தனர். கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கையின் ஒரு பகுதியாக ஜப்பானில் அவசரகால நிலை பிறப்பிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
* அமெரிக்காவின் விமானந்தாங்கிக் கப்பலான தியேடர் ரூஸ்ரேவெல்ட்டின் முன்னாள் கப்டனுக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கப்பலில் 4 ஆயிரத்துக்கும் அதிகமான படையினர் பணியாற்றும் நிலையில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த பென்ரகன் போதிய சிரத்தை காட்டவில்லை என்று கப்டன் முன்னதாகக் குற்றஞ்சாட்டியிருந்தார். இதையடுத்து அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

# 213 கி.மீ. தொலைவில் உள்ள இமயமலை காற்று மாசு குறைவால் தெரிந்த அற்புதம்



பனியால் சூழப்பட்ட இந்த மலைத்தொடரின் ரம்மியமான காட்சியை ஜலந்தர் பகுதியில் வசிக்கும் இன்றைய தலைமுறையினர் கண்டிருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் அதிகரித்துள்ள காற்று மாசு, அந்த மலைத்தொடரை மறைத்துவிட்டது. சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு வரைதான் இந்தப் பனிமலை கண்ணில் புலப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்க இந்தியா முழுவதும் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக, நாடு முழுவதும் வாகனப் போக்குவரத்து முற்றிலும் முடங்கியுள்ளதால் காற்று மாசு பல மடங்கு குறைந்திருக்கிறது.

அந்த வகையில், ஜலந்தர் பகுதியிலும் காற்று மாசு குறைந்திருப்பதால் தவுலதார் மலைத்தொடரின் எழில்மிகு தோற்றம் புலனாகியுள்ளது. இதனால் உற்சாகமடைந்துள்ள ஜலந்தர்வாசிகள், தங்கள் வீடுகளிலிருந்து இந்த மலைத்தொடரின் பின்னணியில் செல்பி எடுத்து சமூக வலைதளங்களில் பதிவிட்டு வருகின்றனர்.

கொரோனா வைரஸால் உலகம் முழுவதும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மக்கள் தங்களின் மோசமான நாள்களை எதிர்கொண்டு வருகின்றனர். பல நாடுகளும் நகரங்களும் முழுமையாக அடைக்கப்பட்டு வருகின்றன. எனவே மக்கள் இயல்பாகவே முடங்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.



இவ்வாறு கவலை தரும் செய்திகளுக்கு மத்தியில் மனதிற்கு நம்பிக்கை அளிப்பது போன்ற நன்மைகளும் நடக்கின்றன.

### மாசு குறைகிறது

பல நாடுகளில் மக்கள் வீட்டை விட்டு வெளியேறத் தடை விதிக்கப்பட்டுள்ளதால் பல நாடுகளில் காற்று மாசு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

சீனா மற்றும் வட இத்தாலியில் காற்றில் நைட்ரஜன் டை ஒக்சைட் அளவு குறைந்துள்ளது. காற்றை மாசுபடுத்தி வெப்பமயமாதலுக்கு முக்கிய காரணமாக உள்ள நைட்ரஜன் டை ஒக்சைடின் அளவு காற்றில் குறைந்து காணப்படுகிறது. தொழிற்சாலைகள் மற்றும் காரில் இருந்து வெளியேறும் புகை குறைந்துள்ளதால் காற்றில் நைட்ரஜன் டை ஒக்சைடு அளவும் குறைந்துள்ளது.

நியூயோர்க்கில் உள்ள ஆர்வலர்கள் பிபிஸியிடம் பேசுகையில், தற்போது பெரும்பாலும் கார்களில் இருந்து வெளியாகும் கார்பன் மோனாக்சைட் அளவும் குறைந்து காணப்படுகிறது என்று கூறுகின்றனர். கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் கார்பன் மோனாக்சைட் ஐம்பது வீதம் குறைந்துள்ளதாக



அவர்கள் தெரிவித்தனர்.

விமானப் போக்குவரத்தும் சில நாடுகளால் ரத்து செய்யப்பட்டுள்ளதாலும் காற்றுமாசு அளவைக் கட்டுப்படுத்தும்.

### சுத்தமாகும் நீர்நிலைகள்

வெனிஸ் நகரவாசிகள் தங்கள் நகரத்தை சூழ்ந்திருக்கும் தண்ணீர் மாசு இல்லாமல் தூய்மையாக காணப்படுவதாக கூறுகின்றனர்.

வடக்கு இத்தாலியில் பிரபலமான சுற்றுலா தலமான வெனிஸ் நகர கால்வாய்த் தெருக்களில் படகு போக்குவரத்து முடங்கியுள்ளதால் நகரம் முழுவதும் தண்ணீர் மிகத் தெளிவாக இருக்கிறது. தற்போது அந்த தண்ணீரில் மீன்களை கூட காணமுடிகிறது.

### மக்கள் மத்தியில் இரக்க குணம்

பல இடங்களில் கடை அடைப்புக்கு முன்பு தேவையான உணவு பொருட்களை வாங்க மக்கள் மத்தியில் போட்டி நிலவுகிறது. ஆனால் அதே சமயம் மக்கள் மத்தியில் இரக்க குணமும் பரவலாக காணப்படுகிறது.

நியூயோர்க்கை சேர்ந்த இருவர் 1,300 தன்னார்வலர்களை ஒன்று திரட்டி 72 மணிநேரத்தில் அத்தியாவசியப் பொருள்களையும், மருந்து பொருள்களையும் முதியவர்களுக்கும், வெளியில் வர இயலாத மக்களுக்கும் வீட்டிற்கே கொண்டு சென்று சேர்த்துள்ளனர்.

லண்டனில் பல்லாயிரக்கணக்கானோர் குழுக்களாக இணைந்து வைரஸைக் கட்டுப்படுத்த தேவையான உதவிகளை செய்து வருகின்றனர். கனடாவிலும் சில குழுக்கள் இவ்வாறு செயல்படுகின்றன.

ஆஸ்திரேலியாவில் உள்ள பல்பொருள் அங்காடிகளில் முதியவர்கள் மற்றும் மாற்று திறனாளிகள் மட்டும் தங்களுக்குத் தேவையான பொருள்களை வாங்க நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மக்கள் பலர் நன்கொடைகள் அளித்து வருகின்றனர். உணவு தயாரிக்க செய்முறை விளக்கங்களை பகிர்கின்றனர், தனிமையில் இருக்கும் முதியவர்களுக்கான உடற்பயிற்சி அறிவுரைகளையும் பலர் பகிர்கின்றனர்.

### மக்களிடையே ஒற்றுமை

கடுமையான அலுவலகப் பணிக்கு பிறகு வீட்டிற்கு வந்து உறங்குவது என பரபரப்பான சூழலில் நாம் இயங்கும்போது வெளியுலகத்தில் இருந்து நாம் தனித்து விடப்பட்டதுமைபோல உணருவோம். ஆனால் கொரோனா பாதிப்புக்கு பிறகு அனைத்து மக்களும் ஒரு சமூகமாக ஒன்று சேர்ந்துள்ளனர்.

இத்தாலியில் மக்கள் நடமாட தடை விதிக்கப்பட்ட சூழலில், மக்கள் அனைவரும் வீட்டு பால்கனியில் நின்றபடி பாடல் பாடி, இசை கருவிகள் வாசித்து கூடிமகிழ்கின்றனர்.



தெற்கு ஸ்பெயினில் உள்ள ஓர் உடற்பயிற்சி நிபுணர் அபார்ட்மென்டின் நடுவில் நின்று உடல்பயிச்சிமேற்கொள்கிறார். உடற்பயிற்சி நிபுணர் மேற்கொள்ளும் பயிற்சிகளை அதே அபார்ட்மெண்டில்உள்ள மக்கள் தங்கள் பால்கனியில் இருந்தபடி கற்றுக் கொண்டு தாங்களும் அதை தொடர்ந்து செய்கின்றனர்.

மக்கள் பலர் தங்களை தனிமைப்படுத்திக் கொண்டதால் மொபைல் மூலம் பழைய நண்பர்களை தொடர்ப்பு கொண்டு பேச வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த வைரஸால் மருத்துவத் துறையில் பணியுரியும் ஊழியர்களின் முக்கியத்துவத்தை மக்கள் உணர்ந்துள்ளனர். லண்டனில் மருத்துவம் பயி



லும் மாணவர்கள் பலர் தாங்களாகவே முன் வந்து மருத்துவர்கள் சிகிச்சை அளிக்க உதவுகின்றனர்.

### திறமை, ஆற்றல் அதிகரிக்கிறது

மில்லியன் கணக்கான மக்கள் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில், பலர் வீட்டில் இருந்தபடி திறமையை வளர்த்துக்கொள்கின் றனர். சமூக வலைத்தள பயன்பாட்டாளர்கள் தங்களின் பொழுதுபோக்கு குறித்து தங்களின் சமூக வலைத்தள பக்கத்தில் விளக்கமாக பதிவிடுகின்றனர். புத்தகம் படிப்பது, கேக் செய்வது, ஓவியம் வரைதல் என பல திறமைகளை மக்கள் வளர்த்துக்கொள்கின்றனர்.

அமெரிக்காவில் உள்ள ஓவிய ஆசிரியர் ஒருவர் இணையம் மூலம் தன் மாணவர்களுக்கு ஓவியம் வரைய கற்றுத்தருகிறார்.

# மக்களின் நலிவு நிலைமையை அரசியல்வாதிகள் தேர்தலுக்குப் பிரசாரமாக்க இடமளிக்காதீர்கள்!

## பிரதமர் மஹிந்தவுக்கு தேர்தல் ஆணையர் மஹிந்த கடிதம்



கொழும்பு,ஏப்.06

அரசியல்வாதிகள் இந்த சந்தர்ப்பத்தில் அரசியல் இலாபம் பெற முயற்சிப்பதை தடுத்து நிறுத்துமாறும், மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பொறிமுறையை செற்படுத்த விசேட திட்டம் ஒன்று அவசியம் என்றும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தபிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு நேற்றுத் தாம் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தற்போதைய சூழலில் தமக்கான பிரசார நடவடிக்கையாக நிவாரணம் வழங்கும் செயற்பாடுகளில் ஈடுப்பட்டு வருகின்றனர் என முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனவும் அவர் கூறியுள்ளார்.

ஆளுநர்கள், அமைச்சின் செயலாளர்கள், தலைமைச் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்ற ஆணையாளர்கள் மற்றும் கள அலுவலர்கள் பாதுகாப்புப் படைகளின் உதவியுடன் பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

ஒரு சில அரசியல்வாதிகள் இந்த சந்தர்ப்பதில் அரசியல் இலாபம் பெற முயற்சிப்பதை தடுத்து நிறுத்துமாறும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய அந்த கடிதத்தனினூடாக பிரதமரை கேட்டுள்ளார்.

## இரவில் குடை சாய்ந்த 'கப்'

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹட்டன் நுவரெலியா பிரதான வீதியில் கொட்டகலை கொமர்ல் பகுதியில் நேற்று இரவு கப் ரக வாகனம் ஒன்று பிரதான வீதியில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணம் செய்த இருவர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தப்பளை பகுதியிலிருந்து கொழும்புப் பகுதியை நோக்கி மரக்கறி வகைகளை ஏற்றிச் சென்றுகொண்டிருந்த கப் ரக வாகனமே மண்மேட்டில் மோதுண்டு இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

வாகனம் வேகக்கட்டுப்பாட்டை மீறியதனாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை திம்புள்ள பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கொரனோ என்னிடம் நெருங்காதே !

கொரனோ என்னிடம் நெருங்காதே
கோரம் எனக்குத் தெரிகிறது
இருமல் தடிமல் வந்தாலும்
எனக்குள் பயமே எழுகிறது
கொரனோ என்னிடம் நெருங்காதே !

அருகில் பிள்ளை இருந்தாலும்
அணைக்க பயமே வருகிறது
தெருவில் போக விருப்பிடினும்
உருவாய் நீயே தெரிகின்றாய்
கொரனோ என்னிடம் நெருங்காதே !

கோவில் சென்று வழிபடுதல்
கொள்கை வாழ்வில் கொண்டிருந்தும்
என்னைத் தடுக்கும் கொரனோவே
உன்னை யமனாய் காணுகிறேன்
கொரனோ என்னிடம் நெருங்காதே !

தொட்டால் பிடித்துக் கொள்ளுகிறாய்
தூரவே சென்றால் துரத்துகிறாய்
நட்டமே வாழ்வில் தருகின்றாய்
நரபலி உனது பெருவிருப்பே
கொரனோ என்னிடம் நெருங்காதே !

உணவை உண்ணும் வேளையிலும்
உனையே நினைக்க வைக்கின்றாய்
மனைவி அருகில் வந்தாலும்
மருண்டே பார்க்க வைத்துவிட்டாய்
கொரனோ என்னிடம் நெருங்காதே !

இரவில் உறங்கும் வேளையிலும்
இடைவெளி காண வைத்துவிட்டாய்
கனவு இரவில் கண்டாலும்
கொரனோ வந்தே ஆடுகிறாய்
கொரனோ என்னிடம் நெருங்காதே !

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா, மெல்பேர்ண் - அவுஸ்திரேலியா

## நான் காற்று வாங்கப் போனேன் ஒரு கஷ்டம்வாங்கி வந்தேன்!

நான் காற்றுவாங்கப் போனேன்
ஒரு கஷ்டம்வாங்கி வந்தேன்
அதைக் கேட்டு வாங்கவில்லை
இப்போ கிலிக்குள் நிற்கிறேனே
நான் காற்றுவாங்கப் போனேன்

தொண்டை வரண்டு வருது
எனக்கு தும்மல்கூட வருது
உடலும் வலியாய் இருக்கு
இப்போ உள்ளம் பயத்திலிருக்கு
நான் காற்றுவாங்கப் போனேன்

எச்சில் விழுங்கும் போதும்
எனக்கு எரிச்சலாக இருக்கு
மூச்சை இழுத்து நிற்க
இப்போ சோர்வு அதிகமாச்சு
நான் காற்றுவாங்கப் போனேன்

பழத்தைக் கடித்துப் பார்த்தேன்
அதன் இனிப்புத் தெரியவில்லை
மலரை நுகர்ந்து பார்த்தேன்
அதன் மணமும் உணரவில்லை
நான் காற்றுவாங்கப் போனேன்

உடனே ஓடிச் சென்றேன்
எனக்கு உதவி நாடியங்கு
கொரனோ என்று சொன்னார்
குழம்பி அங்கு நின்றேன்
நான் காற்றுவாங்கப் போனேன்

வீட்டில் இருந்த வேளை
எனக்கு எதுவும் நிகழவில்லை
வீட்டை விட்டுச் சென்றேன்
இப்போ வினைக்குள் மாட்டிவிட்டேன்
நான் காற்றுவாங்கப் போனேன்

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா, மெல்பேர்ண் - அவுஸ்திரேலியா

## வவுனியாவில் இலவச மரக்கறி விநியோகம்



வவுனியா, ஏப். 06

வவுனியாவில் ஊரடங்குச் சட்டம் இன்று தளர்த்தப்பட்டிருந்தது. இதனையடுத்து பொதுமக்கள் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு வவுனியா நகருக்கு அதிகமாக வருகை தந்தனர்.

இந்நிலையில் வவுனியா மில் வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றால் மரக்கறி வகைகள் பொதுமக்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டன. சுமார் 25 ஆயிரம் கிலோ மரக்கறிவகைகள் காலை 9 மணி முதல் மதியம் 1 மணிவரை இலவசமாக வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 19 மாவட்டங்களில் ஊரடங்கு தளர்வு

கொழும்பு, ஏப். 06

19 மாவட்டங்களில் இன்று காலை 6 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை ஊரடங்கு தளர்வு என அறிவிக்கப்பட்டது.

கொழும்பு, கண்டி, களுத்துறை, கம்பஹா மற்றும் புத்தளம், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஏனைய 19 மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் இன்று காலை 6 மணிக்கு தளர்த்தப்பட்டு மீண்டும் இன்று பிற்பகல் 2 மணிக்கு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது.

இதேவேளை, அந்த மாவட்டங்களில் ஊரடங்கு உத்தரவை நீக்குவது குறித்து பின்னர் அறிவிக்கப்படுமென ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் கொரோனா வைரஸ் தொற்றைத் தடுக்கும் நடைமுறைகள் மக்களின் நலனுக்காகவே என்பதால் அந்த நடைமுறைகளையும், அறிவுறுத்தல்களையும் பின்பற்றுமாறு அரசு வலியுறுத்தியுள்ளது

(ஐ)

# இலங்கை ரூபாயின் பெறுமதி பெரும் சரிவு

கொழும்பு, ஏப். 06

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை நாணயத்தின் மதிப்பு வீழ்ச்சியடைந்து, 199.40 ரூபாவைத் தொட்டுள்ளது. வரலாற்றில் இலங்கை ரூபாயின் பெறுமதி பெரும் சரிவைச் சந்தித்துள்ளது.

2020ஆம் ஆண்டு மூன்று மாதங்களில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாய் 6.1 சதவீத சரிவைச் சந்தித்துள்ளது.

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை நாணயத்தின் பெறுமதி நாளுக்கு நாள் வீழ்ச்சியைச் சந்தித்து வருகிறது.

இலங்பை மத்திய வங்கி இன்று திங்கட்கிழமை வெளியிட்ட நாணய மாற்று விகிதங்களின் அடிப்படையில் அமெரிக்க டொலர் ஒன்றில் விற்பனைப் பெறுமதி, 199.40 ரூபாவாகக் காணப்பட்டது.

2019ஆம் ஆண்டு டிசெம்பர் மாத இறுதியில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுதிமதி 183.33 ரூபாயாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சொந்த ஊர் திரும்ப முடியாதவர்கள் வீடு செல்வதற்கு அரசு நடவடிக்கை

கொழும்பு, ஏப். 06

சொந்த ஊர்களுக்குத் திரும்ப முடியாமல் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளவர்கள், தமது ஊர்களுக்குத் திரும்புவதற்கான தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டில் கொரோனா தாக்கத்தையடுத்து, திடீர் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில், பல பொதுமக்கள் தமது சொந்த ஊர்களுக்குத் திரும்ப முடியாது வேறு மாவட்டங்களில் சிக்கிக்கொண்டனர். இதனால் அவர்கள் பல பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், அந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பும் நடவடிக்கைகளை மேற் கொள்ளும் பொருட்டு, அரசால் சில தொலைபேசி இலக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

தமது சொந்த ஊர்களுக்குத் திரும்ப முடியாது, வேறு பிரதேசங்களில் தங்கியுள்ள மக்கள் குறித்த தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு விவரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என, அறிவிக்கப்பட்டுள்ளது.

# நாட்டில் 42,000 பேர் ஆபத்தில்!

## மருத்துவர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 06

இலங்கையில் சுமார் 42 ஆயிரம் பேர் ஆபத்தான நிலையில் உள்ளனர் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களை முடிந்தவரை வேகமாகக் கண்டறிந்து தனிமைப்படுத்த ஏதுவாக இலங்கையில் நாள் ஒன்றுக்கான கொரோனா பரிசோதனைகளை அதிகரிக்க வேண்டும் எனவும் மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசிடம் கோரியுள்ளது.

பயிர்ச் செய்கை மற்றும் உற்பத்தியைத் விரைவாகத் தொடங்கல் ஏதுவாக அதிவிரைவுச் சோதனைகள் மூலம் பாதிப்பற்ற நிலை உறுதி செய்யப்பட வேண்டும்.

இல்லையேல் மே அல்லது ஜூன் இறுதிக்குள் நாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்படும் எனவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் தற்போது நாளொன்றுக்கு வெறும் 300 பரிசோதனைகள் மட்டுமே இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் கொரோனாவைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ள தென்கொரியா போன்ற நாடுகள் நாளொன்றுக்கு அதிகளவான பரிசோதனைகளைச் செய்தன. இதன் மூலம் வேகமாக நோயாளர்கள் கண்டறியப்பட்டு ஆரோக்கியமானவர்களிடம் இருந்து தனிமைப்படுத்தப்பட்டனர் என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

# பொய்ப் பிரசாரம் வேண்டாம்!

## பொலிஸார் வேண்டுகோள்



தனிமைப்படுத்தல் கண்காணிப்பு செயற்பாடு தொடர்பில் சமூக ஊடகங்களின் ஊடாக பொய்யான பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டாமென பொலிஸார் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனூடாக தனிமைப்படுத்தல் செயற்பாடு தொடர்பில் மக்களுக்கு அவநம்பிக்கை ஏற்படும் எனப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அவ்வாறான பொய்யான பிரசாரங்களை மேற் கொள்வோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறான உண்மைக்குப்புறம்பான தகவல்களை சமூக வலைத்தளங்களின் ஊடாக பரப்பிய பெண் ஒருவர் வாத்துவ பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

# முல்லை. இளைஞன் கொலை; எட்டு பேருக்கு விளக்கமறியல்

முல்லைத்தீவு, ஏப். 06

முல்லைத்தீவு - குமுழமுனை பகுதியில் இளைஞன் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக, கைது செய்யப்பட்ட 8 பேரும் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குமுழமுனை பகுதியில் இளைஞர் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் குமுழமுனை பகுதியைச் சேர்ந்த 3 குடும்பங்களைச் சேர்ந்த 12 பேர் பொலிஸாரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் 8 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த 8 பேரும் முல்லைத்தீவு நீதிமன்றத்தின் பதில் நீதவான் முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் அவர்களை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

# யாழ். போதனா வைத்தியசாலைக்கு இந்து அமைப்புக்களின் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.06

யாழ். போதனா வைத்தியசாலைக்கு இந்து அமைப்புக்கள் மற்றும் அந்தணர்கள் இணைந்து ஒரு தொகை முகக் கவசங்களை (Face mask) அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

லண்டன் என்பீலட் நாகபூஷணி அம்மன் ஆலயம், வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம், யாழ். இந்து குருமார் ஒன்றியம் ஆகியன இணைந்து இந்த முகக் கவசங்களை வழங்கினர்.

இந்த நன்கொடைகளை யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி பெற்றுக் கொண்டார்.








காலைக்கதிர் Kalaikkathir

நிலாச் சோறு




தினம் ஒரு தலைப்பு

சித்திரப்போட்டி

நாளைய (07/04/2020) தலைப்பு
நிலாச் சோறு

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

# இணுவிலில் அரச கால்நடை வைத்தியசாலை உடைப்பு

## அயலவர் விரைந்து செயற்பட்டதால் திருட்டு முயற்சி முறியடிப்பு







யாழ்ப்பாணம், ஏப். 06

இணுவிலில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் அரச கால்நடைவைத்தியசாலைதிருடர்களால்உடைக்கப்பட்டு திருட்டு முயற்சி இடம்பெற்றுள்ளது. எனினும் அயலவர்கள் விரைந்து செயற்பட்டதால் திருடர்கள் அங்கிருந்து தப் பித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றது.

ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ளதால் அந்தக் கால்நடை வைத்தியசாலை மூடப்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி வைத்தியசாலையின் பிரதான கதவை உடைத்து திருடர்கள் உள் நுழைந்துள்ளனர்.

இதனை அவதானித்த அயலவர்கள் அரச கால்நடை வைத்திய சாலைக்குள் செல்ல முற்பட்டபோது திருடர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தத் திருட்டு முயற்சி தொடர்பில் கால்நடை வளர்ப் போர் சங்க பிரதிநிதி காந்தன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபனுக்கும் கால்நடை வைத்திய அதிகாரிக்கும் சம்பவம் தொடர்பில் அறிவித் துள்ளார்.

ஊரடங்கு நேரத்திலும் உடனடியாக அங்கு சென்ற கஜதீபன் நிலைமைகள் தொடர்பில் அவதானித்து சுன்னாகம் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

அங்கு வந்த பொலிஸார் அரச கால்நடை வைத்தியசாலை உடைக்கப்பட்டமை தொடர் பில் விசாரணைகளை முன்னெடுத்துள் ளனர்.

இந்தக் கால்நடை வைத்தியசாலையில் கால்நடை மருந்துகள் மற்றும் அலுவலகக் கணினிகள் உள்பட்ட பெறுமதியான பொருள் கள் உள்ளதாகவும் கால்நடை வளர்ப்போர் சங்கப் பிரதிநிதி காந்தன் தெரிவித்தார்.

## கேப்பாபிலவு முகாமில் இருந்து 203 பேர் இன்று வெளியேறினர்!

முல்லைத்தீவு, ஏப். 06

கொரோனா வைரஸைத் தடுக்கும் வகையில் முல்லைத்தீவு, கேப்பாப்பிலவு விமானப்படைத் தளத்தில் தனிமைப்படுத்திக் கண்காணிக்கப்பட்ட 203 பேர் இன்று அங்கிருந்து வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கடந்த மாதம் 22 ஆம் திகதி இந்தியாவிலிருந்து வருகை தந்த சிலரே இன்று தனிமைப்படுத்தும் நிலையத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று விமானப்படை அறிவித்துள்ளது.

தனிமைப்படுத்தும் நிலையத்திலிருந்து அனுப்பப்பட்டவர்களில் 56 ஆண்களும், 147 பெண்களும் சிறுவர் ஒருவரும் 5 பௌத்த தேரர்களும் அடங்குகின்றார்கள்.

14 நாட்கள் கண்காணிப்பின் பின்னர் இவர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியப் பரிசோதனையின்போது இவர்களில் எவருக்கும் நோய்க்குரிய அறிகுறிகள் தென்படவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தனிமைப்படுத்திக் கண்காணிக்கும் நிலையங்களிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளவர்கள் மேலும் 14 நாட்கள் வீடுகளில் சுய தனிமையில் ஈடுபடவேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

## அரநாயக்கா பகுதியில் ஊரடங்குத் தளர்வு ரத்து

### இளைஞரின் மர்ம மரணத்தையடுத்து

இளைஞர் ஒருவர் திடீரென உயிரிழந்தமயை அடுத்து கேகாலை மாவட்டத்தில் உள்ள திப்பிட்டிய, அரநாயக்கா பிரதேசத்தில் இன்றையதினம் ஊரடங்கு தளர்த்தப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் யாழ்ப்பாணம் உட்பட ஆறு மாவட்டங்களைத் தவிர 19 மாவட்டங்களில் ஊரடங்கு தளர்த்தப்பட்டது.

எனினும் கேகாலை மாவட்டத்தில் உள்ள திப்பிட்டிய, அரநாயக்கா பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை இளைஞர் ஒருவர் திடீரென மரணமடைந்துள்ளார்.

இதனையடுத்து அரநாயக்கா பொலிஸர், அப்பிரதேசத்தில் இன்றையதினம் ஊரடங்கு தளர்த்தப்படாதென நள்ளிரவு வேளையில் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தனர்.

அந்த இளைஞரின் மரணத்திற்கான காரணம் கண்டறியப்படவில்லை.அவர் கொரோனா தொற்றுக்குள்ளாகி இறந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

வைத்திய அறிக்கை வரும் வரை மேற்படி பிரதேசத்தில் ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளது.






# தொற்றாளர்களின் எண்ணிக்கை 17 ஆம் திகதிக்குள் 250 ஆகும்

## சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் மதிப்பீடு

*கொழும்பு,ஏப்.06*

*நாட்டில் தற்போது உள்ள சூழ்நிலையில், எதிர்வரும் 17 ஆம் திகதிக்குள் சுமார் 250 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகலாம் என கணிக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் மருத்துவ நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார். இணைய ஊடகம் ஒன்றுக்கு தகவல் வழங்கும் போது அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.*

இதன்போது அவர் தெரிவித்தவை வருமாறு:–

நாட்டில் தற்போது உள்ள சூழ்நிலையில், எதிர்வரும் 17 ஆம் திகதிக்குள் சுமார் 250 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றுதியாகலாம் என கணிக்கப்பட்டுள்ளது.

எனினும் பயண மட்டுப்படுத்தல் உள்ளிட்ட சுகாதார ஆலோசனைகளை உரிய முறையில் பின்பற்றினால் நாட்டில் கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்தலாம் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதுவொருபுறமிருக்க, கொரோனா தொற்றின் அறிகுறிகள் தென்படாத சிறார்களுக்குள் கொரோனா வைரஸ் காணப்படக் கூடும் என சிறுவர்களுக்கான நோய் தொடர்பான விடே நிபுணர் தீபால் பெரேரா கருத்து வெளியிட்டுள்ளார்.

இதனையடுத்து, வைரஸ் தொற்றக் கூடும் என்ற அச்சம் உள்ள பின்னணியில் அது தொடர்பில் சிறார்கள் மற்றும் தாய்மார் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.



இதேவேளை, ஸ்ரீலங்கா முழுவதும் தற்போதுவரை 176 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கோண்டாவில் டிப்போவில் நின்ற 6 பஸ்களில் டீசல் திருடப்பட்டது

## தொலைக்காட்சியையும் காணோம்

*யாழ்ப்பாணம், ஏப்.06*

*யாழ்ப்பாணம் கோண்டாவில் டிப்போவில் தரித்து நின்ற இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான ஆறு பஸ்களில் டீசல் திருடப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது :-*

*நாட்டில் ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ள நிலையில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ்கள் அனைத்தும் கோண்டாவில் பஸ் நிலையத்தில் தரித்து வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு தரித்து நின்ற 6 பஸ்களில் டீசல் திருடப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*கோண்டாவில் சாலையின் உயர் அதிகாரிகள் இந்த முறைப்பாட்டைக் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்துள்ளனர்.*

*இந்த முறைப்பாட்டில் 6 பஸ்களில் டீசல் திருடப்பட்டதாகவும் பஸ் ஒன்றில் இருந்து ஒரு தொலைக்காட்சியும் திருடப்பட்டுள்ளதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளனர்.இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.*

# கசிப்பு உற்பத்தியாளர், விற்பனையாளர்கள் கஞ்சா கடத்துவோர் முல்லையில் கைது

முல்லைத்தீவு, ஏப்.06

முல்லைத்தீவு சாலைகடல் நீர் ஏரி ஊடாக படகில் புதுக்குடியிருப்பு பகுதிக்குக் கஞ்சா கடத்தப்டுவதாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளார்கள்.

இதன்போது படகு ஒன்று சாலை கடல் நீர்ஏரி வழியாக வருவதை அவதானித்த பொலிஸார் சந்தேக நபர்களை துரத்தி சென்ற போது அவர்கள் படகையும் கொண்டு வந்த கேரளா கஞ்சாவையும் கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

படகில் இருந்த 4 கிலோகிராம் கேரளா கஞ்சாவைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளமையுடன் அதனை நீதிமன்றில் பாரப்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை புதுக்குடியிருப்புப் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதிகளில் சட்டவிரோமான முறையில் மதுபானம் உற்பத்திசெய்த மற்றும் விற்பனைசெய்த ஆறுபேர் கைதுசெய்யப்பட்டுள்ளமையுடன் மூவர் தப்பி ஓடியுள்ளனர் என புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு இருட்டுமடு காட்டுப் பகுதியின் ஆற்றங்கரையில் சட்டவிரோதமான முறையில் மதுபானம் காச்சிய நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளமையுடன் அவர்களிடம் இருந்து சட்டவிரோத மதுபானம் காய்ச்ச பயன்படுத்தப்படும் பெருமளவு பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்ட இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளமையுடன் மேலும் மூவர் தப்பிஓடியுள்ளனர் எனப் புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்துள்ளார்கள்.

இதன்போது 7 பரல் கோடா , 58 லீற்றர் கசிப்பு என்பன மீட்கப்பட்டுள்ளன. கைதுசெய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளார்கள்.

# கிளிநொச்சியில் குவிந்த மக்கள்

கிளிநொச்சி, ஏப். 07

கிளிநொச்சி நகரில் இன்று திங்கட்கிழமை காலை ஆறு மணி முதல் பகல் இரண்டு மணிவரை ஊரடங்கு தளர்த்தப்பட்ட போது வழமைக்கு மாறாக அதிகளவில் மக்கள் ஒன்று கூடினர்.

கடந்த முதலாம் திகதி பிற்பகல் 2 மணிக்கு அமுலுக்கு வந்த ஊரடங்கு இன்று திங்கள் காலை ஆறு மணி தொடக்கம் 2 மணிவரை தளர்த்தப்பட்ட போது தங்களது அத்தியாவசியத் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்காக நகரில் அதிகளவு மக்கள் திரண்டிருந்தனர்.

வியாபார நிலையங்கள், சந்தை, வங்கிகள்,சதொச விற்பனை நிலையம் போன்றன மக்களால் நிறைந்திருந்தன.

அதிகளவு மக்கள் குறிப்பிட்ட நேரத்திற்குள் நகரின் மையப்பகுதியில் ஒன்று திரண்டமையால் போக்குவரத்து நெருக்கடியும் ஏற்பட்டது.







# கொரோனா தொற்றாளருடன் பழகிய 50 பேர் தனிமையில்!

கொழும்பு, ஏப்.

கொரோனாவினால் பாதிக்கப்பட்ட நபர் ஒருவருடன் தொடர்பைப் பேணிய 50 பேரை தனிமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காலி கராப்பிட்டிய – அக்குரெஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த 50 பேர் இவ்வாறு தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரையும் தியத்தலாவை தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்புவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுள் 17 ஆண்கள் மற்றும் 17 பெண்கள், பெண் குழந்தைகள் 9 பேர் மற்றும் ஆண் குழந்தைகள் 7 பேர் உள்ளடங்குவதாக குறிப்பிடப்படுகின்றது.

# ஜா—எல பகுதி முடக்கப்பட்டது

ஜா – எல பகுதியில் வசிக்கும் 25 வயதான இளைஞர் ஒருவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை நேற்று இரவு உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஜா – எல சுதுவெல்ல மற்றும் பாரிஸ் பெரேரா மாவத்தை ஆகிய பகுதிகள் நேற்று இரவுமுதல் முடக்கப்பட்டுள்ளன.

இதற்கான நடவடிக்கையை பிரதேச பொது சுகாதார அதிகாரிகள் மற்றும் ஜா - எல பொலிஸார் இணைந்து மேற்கொண்டுள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.04.2020 இல் வெளியிடப்பெற்றது.